செ.வெ.எண்:73 நாள்:25.10.2018

கரூர் மாவட்டம்

**கரூர் மாவட்டத்தில் மூச்சுக்காற்றினால் பரவக்கூடிய சளிக்காய்ச்சல், சீசன் இன்புளுயன்சா, பன்றிக்காய்ச்சல் (A-H1N1) தடுப்பு நடவடிக்கைகள் முழுவீச்சில் முடுக்கிவிடப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

பன்றிக்காய்ச்சல் இன்புளுயன்சா, (A-H1N1) என்பது மூச்சுக்காற்று, இருமல் மற்றும் தும்மலின்போது வெளிப்படும் நீர்த்திவாலைகள் மூலம் பரவும். இந்நீர்த்திவாலைகளில் உள்ள A-H1N1 வைரஸ் மற்றவர்கள் கைகளில் பட்டு அவர்களின் கண், மூக்கு, வாய் மூலம் உடலினுள்ளே சென்று நோய்த்தாக்கத்தினை ஏற்படுத்தும். இன்புளுயன்சா வைரஸ் கிருமியானது நீர்த்திவாலைகள் மூலம் அறையின் தரை, மேஜை, நாற்காலி, கதவு, கைப்பிடிகள், கைப்பேசி, மின்சுவிட்சு போன்ற பகுதிகளில், சில மணிநேரம் முதல் 2 நாட்கள் வரை உயிருடன் இருக்கலாம்.

சளி, இருமல், காய்ச்சல், தும்மல், தலைவலி, தொண்டைவலி, வாந்தி, வயிற்றுப்போக்கு, மூச்சுத்திணறல், மூச்சிரைப்பு போன்றவை பன்றிக்காய்ச்சலின் அறிகுறிகள் ஆகும். பன்றிக்காய்ச்சல் தொற்று ஏற்படாமல் தடுக்க தினமும் 1-2 முறையாவது அறையின் தரை, கதவு, மேஜை, நாற்காலி, கைப்பிடி, கைப்பேசி போன்றவற்றை கிருமி நாசினி (பிளீச்சிங் திரவம்) கொண்டு துடைத்து சுத்தம் செய்யவேண்டும்.

நோய்த்தொற்று உள்ளவர்களும், இல்லாதவர்களும் 6 நிலை கை கழுவும் முறையினில் தினமும் 5-10 முறையேனும் நன்கு கைகழுவ வேண்டும். வெளியிடங்களில் கைகளை கழுவாமல் மூக்கு, வாய், கண்களை கைகளால் தொடுவதைத் தவிர்க்க வேண்டும். சளி, காய்ச்சல் அறிகுறி உள்ளவர்கள் இருமும்போதும், தும்மும்போதும், வாய் மற்றும் மூக்கை கைக்குட்டை அல்லது துணியால் மூடிக்கொள்ள வேண்டும். கைக்குட்டை - துணியினை தனியே துவைத்து, கிருமி நாசினியில் முக்கி எடுத்து, சூரிய ஒளியில் உலர்த்தி மீண்டும் பயன்படுத்தலாம்.

சளி, காய்ச்சல் அறிகுறிகள் உள்ளவர்களிடம் இருந்து மற்றவர்கள் சுமார் 1 மீட்டர் இடைவெளி விட்டு விலகி இருக்க வேண்டும். சளி,காய்ச்சல் அறிகுறி உள்ளவர்கள் வீட்டினுள்ளேயே தனி அறையில் நன்கு ஓய்வெடுக்க வேண்டும். அநாவசியமாக வெளியில் சென்று மற்றவர்களுக்கு நோய் பரப்புவதை தவிர்க்க வேண்டும். பள்ளி, கல்லூரி, அலுவலகம் மற்றும் வெளியில் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

பொது இடங்கள், கடைகள், பேருந்து, இரயில், மாடிப்படி, கைப்பிடி, டிக்கெட் கவுண்டர், திரையரங்குகள், கல்யாண மண்டபங்கள், அலுவலகங்கள், அனைத்து நாற்காலிகளின் கைப்பிடிகள் போன்றவற்றினை தினம் 1-2 முறை கிருமி நாசினியால் சுத்தமாக துடைத்து வைத்திருக்க அந்தந்த தனியார் நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

பன்றிக்காய்ச்சலை குணமாக்கும் டாமிபுளு எனப்படும் மருந்துகள், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும் கையிருப்பு வைக்கப்பட்டுள்ளது. சளி,காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி ஆலோசனைகள் பெற்று ஆரம்ப நிலையிலேயே டாமிபுளு மாத்திரை உட்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

பன்றிக்காய்ச்சல் அனைத்து பெரிய பொது மற்றும் குழந்தைகள் நல மருத்துவம் உள்ள மருத்துவமனைகளிலும் நோய்த்தடுப்பூசி மற்றும் டாமிபுளு மாத்திரைகளை ஸ்டாக் வைத்து தேவைப்படும் நபர்களுக்கு மருத்துவ ஆலோசனை அடிப்படையில் வழங்கவும் அறிவுறுத்தப்படுகிறது. அவ்வாறு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நபர்களின் பெயர் முகவரியை உடனே துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அலுவலகத்திற்கு (04324 - 255340) தெரியப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. பன்றிக்காய்ச்சல் அறிகுறி இருப்பவர்களின் உடன் இருந்தவர்களுக்கு 10 நாட்களுக்கு டாமிபுளு மாத்திரைகள் உடனடியாக உட்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது கரூர் மாவட்டத்தில் **பன்றிக்காய்ச்சல் 6 பேருக்கு** மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிறப்பு தனிமை வார்டில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று நலமுடன் வீட்டிற்கு சென்றுள்ளனர். அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும், அனைத்து மருத்துவர்கள் மற்றும் தனியார் மருத்துவமனை மருத்துவர்கள் அனைவருக்கும் விழிப்புணர்வு வகுப்புகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு, தேவையான சிகிச்சையினை தாமதமில்லாமல் உடனே அளிக்க அறிவுறுத்தப் பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் பன்றிக்காய்ச்சல் குறித்து பீதியடையாமல் அம்மை நோய் போன்ற மூச்சுக்காற்றினால் பரவும் நோய்களுக்கு மேற்கொள்ளும் தன்னிலை தனிமைப்படுத்திக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பன்றிக்காய்ச்சல் வந்தவர்கள் மேற்கொண்டு மற்றவர்களுக்கு நோய் பரவாமல் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்கு மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**